

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, தனது பிறந்தநாளை முன்னிட்டு, வனம் மற்றும் கதர்கிராமத் தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

## முதலமைச்சரின் உத்தரவிற்கிணங்க

# பவானிசாகர் அணையிலிருந்து தண்ணீர் திறப்பு!

### அமைச்சர்கள் சு.முத்துசாமி – மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தனர்!

ஈரோடு, ஆக 2-

வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி மற்றும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் ஆகியோர் பாசனத்திற்கு தண்ணீரை திறந்து வைத்தார்கள்.

பின்னர் வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் மற்றும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் ஆகியோர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணையிலிருந்து 2025-2026-ஆம் ஆண்டு, முதல்போக பாசனத்திற்கு, கீழ்பவானித் திட்டப் பிரதானக் கால்வாய் இரட்டைப்படை மதகுகள் மற்றும் சென்னசமுத்திரம் பகிர்மான கால்வாய் ஒற்றைப்படை மதகுகள் மூலமாக 1,03,500 ஏக்கர் பாசன நிலங்களுக்கு 31.07.2025 முதல் 14.08.2025 முடிய நாளொன்றுக்கு 2300 கன அடிஃவினாடி வீதம் 15 நாட்கள் சிறப்பு நனைப்பிற்கு 2980.80 மில்லியன் கன அடிக்கு மிகாமலும் 15.08.2025 முதல் 12.12.2025 முடிய 120 நாட்களுக்கு, முதல்போக நன்செய் பாசனத்திற்கு 23846.40 மில்லியன் கன அடிக்கு மிகாமலும் ஆக மொத்தம் 135 நாட்களுக்கு 26827.20 மில்லியன் கன அடிக்கு மிகாமல் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

இதனால், ஈரோடு மாவட்டத்திலுள்ள ஈரோடு, கோபி, பவானி, பெருந்துறை, மொடக்குறிச்சி மற்றும் கொடுமுடி ஆகிய வட்டங்களிலுள்ள நிலங்களும், திருப்பூர் மாவட்டத்தில் காங்கேயம் வட்டத்திலுள்ள நிலங்களும் மற்றும் கரூர் மாவட்டத்தில் அரவக்குறிச்சி வட்டத்திலுள்ள நிலங்களும் என ஈரோடு மாவட்டத்தில் 91,280 ஏக்கர், திருப்பூர் மாவட்டத்தில் 10,330 ஏக்கர் மற்றும் கரூர் மாவட்டத்தில் 1,03,500 ஏக்கர் என மொத்தம் 1,03,500 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். அணையில் 100.06 அடி அளவு நீர் உள்ளது. நீர் இருப்பு 28.77 டி.எம்.சி. ஆறுகளில் 3000 கன அடி நீரும், கீழ்பவானித்திட்ட கால்வாயில் விநாடிக்கு 5 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

மேலும் பவானிசாகர் அணையிலிருந்து நடைமுறையின்படி ஆகஸ்ட் 15 ஆம் தேதி தண்ணீர் திறந்து விடப்படும். தற்போது தண்ணீர்வரத்து அதிகமாக உள்ளதால் தமிழ்நாடு முதலமைச்சர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடுவதற்கு ஏதுவாக முன்னேற்பாடு பணிகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்கள். அந்தவகையில் இந்த வாய்க்காலின் தூரம் 124 மைல்கல் ஆகும். துறை சார்பில் மிக பெரிய முயற்சிகள் மேற்கொண்டு தற்போது 74 மைல்கல்லிற்கு தூர்வாரும் பணிகள் முடித்துள்ளார்கள். இன்றையதினம் திறந்து விடப்பட்ட தண்ணீர் 74 மைல்கல் அடைவதற்கு நான்கு அல்லது ஐந்து நாட்கள் ஆகும். மேலும் 50 மைல்கல் பணிகள் மூன்று நாட்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். எனவே, விவசாயிகள் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி நல்ல மகசூலை பெற வேண்டும் என தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வின் போது, மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.ஜி.வெங்கடாசலம் (அந்தியூர்), வி.சி.சந்திரகுமார் (ஈரோடு கிழக்கு), திருமதி. சி.சரஸ்வதி (மொடக்குறிச்சி), ஈரோடு மாநகராட்சி மேயர் திருமதி சு. நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் வே.செல்வராஜ், கண்காணிப்பு பொறியாளர் கோபி (பொதுப்பணித் துறை, நீர்வள ஆதாரத் துறை), செயற்பொறியாளர்கள் திருமூர்த்தி, (கீழ்பவானி வடிநிலக் கோட்டம்), உதவி செயற்பொறியாளர்கள், உதவி பொறியாளர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணையிலிருந்து வீட்டுவசதி, மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆகியோர் பாசனத்திற்காக தண்ணீர் திறந்து வைத்தனர். நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் ஏ.ஜி.வெங்கடா சலம், ஈரோடு கிழக்கு வி.சி.சந்திரகுமார், மொடக்குறிச்சி சி.சரஸ்வதி, மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் வி.செல்வராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தில் தமிழ்நாடு கடல்சார் வாரியம் மூலம் ரூ.4.10 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட துறைமுக அலுவலக கட்டடத்தை பொதுப்பணி, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைத்து பார்வையிட்டார். உடன் நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு செயலாளர் மரு.ஆர் செல்வராஜ், தமிழ்நாடு கடல்சார் வாரிய முதன்மைச் செயலாளர்/துணைத்தலைவர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் த. வெங்கடேஷ், இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன் ஜீத் சிங் காலோன் . பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் ஆகியோர் உள்ளனர்.

# இராமேசுவரம் - இலங்கை இடையே விரைவில் பயணிகள் கப்பல் சேவை!

### ரூ.118 கோடியில் கப்பல் போக்குவரத்து தொடங்க திட்டம் - அமைச்சர் எ.வ.வேலு தகவல்!

கன்னியாகுமரி, ஆக 2-

ராமேசுவரம் மீன்பிடி துறைமுக அலுவலகம் அருகே துறைமுக கடல்சார் வாரியத்திற்கு சொந்தமான இடத்தில் 50 ஆண்டுகளுக்கு மேலாக செயல் பட்டு வந்த பழைய துறைமுக அலுவலகம் இடிக்கப்பட்டு ரூ.4 கோடியே 19 லட்சத்தில் புதிய அலுவலகம் கட்டப்பட்டது.

இதற்கான பணிகள் நிறைவடைந்த நிலையில் தமிழக பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு அலுவலகத்தை திறந்து வைத்தார். பின்னர் அமைச்சர் எ.வ. வேலு நிருபர்களிடம் கூறியதாவது:

இந்த புதிய துறைமுக அலுவலகம் திறக்கப்பட்டதன் நோக்கமே ராமேசுவரம்- இலங்கையின் தலைமன்னார் இடையே மீண்டும் பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடங்குவதற்குத் தான். ரூ.118 கோடியில் கப்பல் போக்குவரத்து தொடங்க திட்டமிடப்பட்டு உள்ளது. இதற்காக ஒன்றிய அரசிடம் அனுமதி கேட்டு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஒன்றிய அரசின் அனுமதிக்கு பின்னர் சாகர்மாலா திட்டத்தின் கீழ் ராமேசுவரம்- தலைமன்னார் இடையே விரைவில் பயணிகள் கப்பல் போக்குவரத்து மீண்டும் தொடங்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு கூறினார்.

## கிளாம்பாக்கம் ரயில் நிலையம்

# செப்டம்பருக்குள் மக்கள் பயன்பாட்டிற்கு வரும்!

### அமைச்சர் பி.கே. சேகர்பாபு தகவல்!

சென்னை,ஆக.2-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய திருக்கரங்களால் கொளத்தூர் தொகுதியிலுள்ள பெரியார் நகர் மற்றும் வி.க.நகர் பேருந்து நிலையங்கள் செப்டம்பர் மாதத்திலும், குத்தம்பாக்கம் பேருந்து நிலையம் அக்டோபர் மாதத்திலும் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்படும் என்றும், கிளாம்பாக்கம் ரயில் நிலையம் செப்டம்பர் மாதத்திற்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என்று தென்னக ரயில்வே அதிகாரிகள் உறுதியளித்துள்ளார் என்றும், அமைச்சர் பி. கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று முன்தினம் (31.7.2025) வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் வி.க. நகர் சட்டமன்ற தொகுதி, பெரம்பூர், சந்திரயோகி சமாதி சாலையில் புதிய சமுதாய நலக்கூடத்தின் பணிகளையும், கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில் திரு.வி.க. நகர் மற்றும் பெரியார் நகர் பேருந்து நிலையப் பணிகளையும் மற்றும் எழும்பூர் சட்டமன்ற தொகுதியில் சேத்துப்பட்டு நவீன சலவைக் கூடம் பணிகளையும் துரிதபடுத்தும் வகையில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி. கே.சேகர்பாபு அவர்கள் நேரில் சென்று ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார்.

இந்து சமய அறநிலைத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும் போது தெரிவித்ததாவது:

தமிழக முதல்வர், எங்கள் உயிரினும் மேலான அன்புத் தலைவர் அவர்களின் சிந்தனையில் தோன்றிய 'வட சென்னை வளர்ச்சி திட்டம்' வழியாக, இதுவரை 282 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் உருவான காலத்திலிருந்து இது வரை இல்லாத அளவிற்கு, குறிப்பாக வறுமை கோட்டிற்கு கீழே வசிக்கும் மக்களுக்கும், நடுத்தர மக்களுக்கும் பயன்படும் வகையில் பல்வேறு கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்த வளர்ச்சிப் பணிகளில், முக்கியமான ஒன்று பேருந்து நிலையங்களை மேம்படுத்தும் பணியாகும். இதன் அடிப்படையில், குத்தம்பாக்கம் பேருந்து நிலையம் கடந்த ஆட்சி காலத்தில் தொடங்கப்பட்டிருந்தாலும், அப்போது மக்கள் பயன்பாட்டிற்கு தேவையான அடிப்படை வசதிகள் இல்லாமையே குறையாக இருந்தது. தற்போது அந்த குறைகள் நீக்கப்பட்டு, புதிய அடிப்படை வசதிகளுடன் குத்தம்பாக்கம் பேருந்து நிலையம் கட்டப்பட்டு வருகிறது.

அதேபோல், செங்கல்பட்டில் வளர்ந்து வரும் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக, இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, புதிதாக ஒரு பேருந்து நிலையம் அமைக்கப்படும் வகையில் தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். அந்தப் பேருந்து நிலையமும் தற்போது முழுமையாக உருவாகிக் கொண்டிருக்கிறது.

மகாபலிபுரத்தில் புதிய பேருந்து நிலையம் வடிவமைக்கப்பட்டு பணிகள் நடைப்பெற்று வருகின்றன. ஆவடியில் அதிகரித்திருக்கும் போக்குவரத்து நெரிசலை சமாளிக்க, பயணிகளுக்கு வசதியாக புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டு வருகிறது. பெரியார் நகரில் கட்டுமானத்திற்குள்ளாக உள்ள பேருந்து நிலையமும், திருவிக நகர் தொகுதி மற்றும் கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மற்றொரு பேருந்து நிலையமும், செப்டம்பர் மாதம் முதல் வாரத்தில் முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும். முல்லைநகர், உதயசூரியன், ஆர்கே நகர், அம்பத்தூர் ஆகிய இடங்களில் கட்டப்பட்டு வரும் பேருந்து நிலையங்கள் இறுதி கட்டத்தை எட்டியுள்ளன. இவை அனைத்தும் செப்டம்பர் மாத இறுதிக்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.



ஒட்டுமொத்தமாக ரூ.200 கோடி செலவில் 12க்கும் மேற்பட்ட MTC பேருந்து நிலையங்களை சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் மேம்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளது. இதில், முதன் முதலில் போக்குவரத்துத்துறைக்கு கீழ் உருவான ஆர். கே. நகர் பேருந்து நிலையம், அப்போது போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்டது என்பதை மகிழ்ச்சியுடன் நினைவு கூர்கிறேன். இன்று அம்பத்தூர் பேருந்து நிலையம் முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில் புதிய பொலிவுடன் உருவாகி வருகிறது.

இந்தப் பணிகளை எப்போதும் ஆய்வு செய்து தொடர்ந்து முன்னேற்றம் காணச் செய்பவர்கள்: எங்கள் துறையின் செயலாளர் திருமதி.காகர்லா உஷா அவர்களும், மாநகராட்சி மேயர் திருமதி.பிரியா அவர்களும், உறுப்பினர் செயலாளர் பிரகாஷ் அவர்களும், மாநகராட்சியின் ஆணையாளர் குமரகுருபரன் அவர்களும், மண்டலத் தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், மாநகராட்சி மன்ற உறுப்பினர் நாகராஜன் மற்றும் பகுதி செயலாளர் முரளி ஆகியோருடன் ஒருங்கிணைந்து சிறுசிறு சிக்கல்களை தீர்த்து பணிகளை முன்னெடுத்து வருகிறது.

முடிச்சூர் ஆம்னி பேருந்து நிலையம் திறக்கப்பட்டு 8 மாதங்கள் ஆகின்றன. அந்த நிலையம் தொடர்பாக வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. எங்கள் துறையின் செயலாளர் அவர்களும், மற்றும் உறுப்பினர் செயலாளர் ஆகியோர் சட்ட ஆலோசகர்களுடன் இதை விரைவில் தீர்க்கும் வகையில் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் ஒப்புதல் அளித்து தான் முடிச்சூர் பேருந்து நிலையம் அமைக்கப்பட்டது. ஆனால் பின் சில காரணங்களை முன் வைத்து அவர்கள் அதை பயன்பாட்டிற்கு கொண்டு வர மறுத்துள்ளனர். இருப்பினும், குத்தம்பாக்கம் பேருந்து நிலையம் 2 அல்லது 3 மாதங்களில் திறக்கப்பட்டவுடன் இந்த பிரச்சனைக்கும் ஒரு தீர்வு கிடைக்கும்.

கிளாம்பாக்கம் ரயில் நிலையம் தொடர்பாக, கடந்த ஆய்வு கூட்டத்தில், தென்னக ரயில்வே பொது மேலாளரிடம், எங்கள் துறையின் செயலாளர் அவர்களும் மற்றும் உறுப்பினர் செயலாளர் அவர்களும் விரைவில் பணியை நிறைவு செய்ய வேண்டுகோள் வைத்தனர். இந்த ரயில் நிலையத்திற்கான ரூ.20 கோடியையும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமமே ஒதுக்கியுள்ளது. அந்த பணியும் செப்டம்பர் மாதத்திற்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என உறுதியளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது மேயர் திருமதி.ஆர்.பிரியா, சி.எம்.டி.ஏ. உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையர் எச்.ஆர். கௌஷிக், மண்டலக்குழுத் தலைவர்கள் திருமதி.சரிதா மகேஷ்குமார், கூ.பீ.ஜெயின், தலைமை திட்ட அமைப்பாளர் எஸ்.ருத்ரமூர்த்தி, தலைமைப் பொறியாளர் மகாவிஷ்ணு, கண்காணிப்பு பொறியாளர்கள் ராஜமகேஷ்குமார், பாலமுருகன், செயற்பொறியாளர்கள் ராஜன்பாபு, திருமதி.விஜயகுமாரி, உள்ளாட்சி பிரதிநிதிகள் ஐ.சி.எப்.முரளிதரன், மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் நாகராஜன், திருமதி.தாவூத்பீ, திருமதி. யோகபிரியா, திருமதி. அமுதா, திருமதி.ஸ்ரீதணி, போக்குவரத்துத் துறை, சென்னை குடிநீர் வாரியம், மின்சாரத் துறை, மாநகராட்சி மற்றும் சி.எம்.டி.ஏ அலுவலர்கள் உடனிருந்தனர்.



புதுக்கோட்டைவடக்கு மாவட்டதிமுக, புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாநகர தி.மு.க. சார்பில் புதுக்கோட்டை அண்ணா சிலை அருகில் டாக்ஸி மார்க்கெட் அருகில் புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையிலும், புதுக்கோட்டை வடக்கு மாநகர பொறுப்பாளர், துணை மேயர் எம்.லியாகத் அலி வரவேற்புரையிலும், புதுக்கோட்டை தெற்கு மாநகர பொறுப்பாளர் வே.ராஜேஸ் வரவேற்புரையிலும் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் 102வது பிறந்தநாள் விழா, செம்மொழி நாள் கழக அரசின் நான்கு ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டத்தில் தமிழ்நாடு பாடநூல் கழக தலைவர், கழக கொள்கை பரப்பு செயலாளர் திண்டுக்கல் ஐ.லியோனி, சிறப்புரை யாற்றுகிறார் நிகழ்வில் டாக்டர் வை முத்துராஜா எம்.எல்.ஏ., கவிச்சுடர் கவிதைப்பித்தன், அஞ்சுகா மீனாட்சிசுந்தரம், த.சந்திரசேகரன், அரு.வீரமணி, சுப.சரவணன், கே.ஆர்.என்.போஸ், செ.அசோக்பாண்டியன், பெ.ராஜேஸ்வரி, கீரை.தமிழ்ராஜா, சு.சண்முகம், டாக்டர் சி.குறிஞ்சிவாணன் தவ.பாஞ்சாலன், கே.எஸ்.சந்திரன், மு.க.இராமகிருஷ்ணன், மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், ஒன்றிய, நகர, மாநகர, வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



சென்னை, கலைவாணர் அரங்கில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் ஊடக மையம் சார்பில் "செம்மொழியான தமிழ்மொழியாம்" எனும் தலைப்பில் நடத்தப்பட்ட சமூக ஊடகங்கள் சார்ந்த கலைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பதக்கங்கள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு) இரா. பாஸ்கரன் மற்றும் செய்தித் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.